## இந்தியா சீன எல்லை விவகாரங்கள் குறித்த ஆலோசனைகள் மற்றும் ஒருங்கிணைப்பிற்கான செயல்படுத்தும் வழிமுறைகளுக்கான 4வது கூட்டம்

செப்டம்பர் 30, 2013

இந்தியா சீன எல்லை விவகாரங்கள் குறித்த ஆலோசனைகள் மற்றும் ஒருங்கிணைப்பிற்கான செயல்படுத்தும் வழிமுறைகளுக்கான 4வது கூட்டம் பீஜிங்கில் 2013 செப்டம்பர் 29-30 தேதிகளில் நடைபெற்றது. இந்திய பிரதிநிதிகள் இந்திய வெளியுறவுத்துறை இணை செயலர் (கிழக்காசியா) திரு கவுதம் பம்பாவாலா தலைமையில் இந்திய இராணுவம் மற்றும் இந்தோ திபெத் எல்லை போலீஸ் உறுப்பினர்கள் பங்கேற்றனர். சீன பிரதிநிதிகள், அதன் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் எல்லை மற்றும் பெருங்கடல் துறை டைரக்டர் ஜெனரல், திரு ஓவங் யூஜிங் மற்றும் வெளியுறவுத்துறை, சீன மக்கள் குடியரசின் தேசிய பாதுகாப்பு படையின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்திய பிரதிநிதிகள், சீன வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு லியூ ழென்மின்னை சந்தித்தனர்.

இந்த பேச்சு வார்த்தை மிகவும் வெளிப்படையான, ஆக்கபூர்வமான மற்றும் முன்னெட்டிப்பார்க்கும் சூழலில் நடைபெற்றது. இந்தியா-சீனா எல்லைப்பகுதிகளில் சமீபத்திய முன்னேற்றங்களை குறிப்பாக மேற்கு எல்லையில் இந்தியா சீனா எல்லை பகுதிகளில் சமீபத்திய முன்னேற்றங்களை மறு ஆய்வு செய்த உயர்மட்டக்குழுவினர், இந்தியா-சீனா இடையேயான உறவுகளை மேலும் விரிவு படுத்தும் நோக்கத்தில் எல்லைப்பகுதியில் அமைதியும் சமாதானமும் நிலவ சம்மதித்தனர். இது தொடர்பாக இருதரப்பினரும், எல்லையில் நிலைத்தன்மை தொடர, தற்போது நிலவும் புரிந்துணர்வுகள் மற்றும் ஏற்பாடுகளின் அடிப்படையில் மேலும் நடவடிக்கைகள் எடுப்பது பற்றி விவாதித்தனர்.

இந்த செயல்படுத்தும் வழிமுறைகளுக்கான 5வது கூட்டம் இந்தியாவில் பரஸ்பரம் வசதிப்படும் நேரத்தில் நடத்தப்படும்.

**புதுதில்லி**

**செப்டம்பர் 30, 2013**